**JAMAL MOHAMED COLLEGE(Autonomous)**
**TIRUCHIRAPPALLI 620 020**

**Department of Visual Communication**
**B.Sc., Visual Communication**

# நீதிமன்ற அவமதிப்பு சட்டம் - (Media Laws and Ethics) Part -6

## (Media Laws and Ethics) Part -6

## நீதிமன்ற அவமதிப்பு சட்டம்

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)
முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்
Dr. Ragunathan, Assistant Professor




**நீதிமன்ற அவமதிப்பு சட்டம்**

**The Contempt of Court Act, 1971**

### சட்டம்: குற்றத்தை தடுப்பதற்கு சட்டம் என்ன சொல்வது

சட்டம் சொல்வது குற்றம் புரிந்த ஒருவருக்கு தண்டனை வழங்கப்படுவதற்கு காரணம் அவர் அக் குற்றத்தை மீண்டும் செய்யாமல் இருப்பதற்கும், பிறிதொரு நபர் அக் குற்றத்தை செய்யாமல் தடுப்பதற்கு பெரிதும் பங்காற்றுகிறது.

### அவமதிப்பு

நீதிமன்றத்தின் அவமதிப்பு , பெரும்பாலும் " அவமதிப்பு " என்று குறிப்பிடப்படுகிறது, இது நீதிமன்றத்தின் அதிகாரம், நீதி மற்றும் கால ரவத்தை எதிர்க்கும் அல்லது மீறும் நடத்தை வடிவத்தில் ஒரு நீதிமன்றம் மற்றும் அதன் அதிகாரிகளுக்கு கீழ்ப்படியாத அல்லது எதிராக குரல் கொடுத்தல்.

ஒருவர் செய்யும் செயல் சட்டத் துறைக்கோ அல்லது சட்டத்தை நிர்வகிப்பதற்கோ, இழுக்கு அல்லது அவமதிப்பு உண்டாக்குவது போல் இருப்பது

- மதிக்காமல் நடத்தல்
- விசாரணை நடக்கும் போது குறுக்கீடு செய்தல்
- சாட்சிகளுக்கோ, இதர தொடர்புடைய நபர்களுக்கு தொல்லை கொடுக்கக்கூடியாது
- அவர்மீது தவறான எண்ணம் வரும் வகையில் நடந்து
- கொள்ளல்

இவற்றை அவமதிப்பு என்கிறோம்.

மேலும் நீதிமன்ற உத்தரவை மீறுதல், நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற தடையாக இருத்தல், நீதிமன்ற தீர்ப்புக்களை பாரபட்சமான முறையில் விமர்சித்தல் அல்லது பதிவிடுதல் போன்றன நீதிமன்ற அவமதிப்புக்களாக குறிப்பிடுகின்றனர்.

**நீதிமன்ற அவமதிப்பு சட்டம் (The Contempt of Court Act, 1971)**

1971 ல் தான் நீதிமன்ற அவமதிப்பு இயற்றப்பட்டது.

**நீதிமன்ற அவமதிப்பு என்பது இரண்டு வகைப்படும் அவைகள்**

- உரிமையியல் அவமதிப்பு
- குற்றவியல் அவமதிப்பு

**குடியல் நீதிமன்ற அவமதிப்பு**
**அல்லது**
**உரிமையியல் அவமதிப்பு (Civil Contempt)**

உரிமையியல் அவமதிப்பு என பிரிவு 2(b) கூறப்படுவதாவது

- ஒரு நீதிமன்ற தீர்ப்பையோ (judgement)
- தீர்ப்பாணையையோ (Decree)
- நீதிமன்ற உத்தரவையோ (Orders)
- நீதிப்பேராணையையோ (Writ Petition)
- நீதிமன்றத்தின் இதர ஆணைகளையோ தெரிந்தே, வேண்டுமென்றே கீழ்படியாமல் நடந்து கொள்வது
- நீதிமன்றத்தில் கொடுத்த உறுதிமொழியை காப்பாற்றாமல் வேண்டுமென்றே மீறுவது ஆகியவைகள்

**குற்றவியல் அவமதிப்பு (Criminal Contempt)**

குற்றவியல் அவமதிப்பு என பிரிவு 2(c) கூறப்படுவதாவது

- வாய் வார்த்தைகள்
- சைகைகள்
- எழுத்துக்கள் மூலம் ஒரு நீதிமன்றத்தின் அதிகாரத்தை குறைப்பது போன்றும்
- அவமதிப்பது போலவோ எந்தவொரு செயலையும் செய்வது
- நீதிமன்ற நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்வது

- அந்த நடவடிக்கைகள் பற்றி தவறான எண்ணம் வரும் வகையில் செயல்படுவது
- வேறு ஏதேனும் வழியில் நீதிமன்ற நடவடிக்கைகளில் குறுக்கீடு செய்வது
- தடை செய்வது போன்றவைகள்
  சட்ட பிரிவு 3 ன்படி அவமதிப்பு ஆகாதவைகள்

இந்த சட்டத்தின் பிரிவு 3 ன்படி, எந்தவிதமான தவறான எண்ணமோ, களங்கமோ இல்லாமல் வெளியிடப்படும் அத்தகைய செய்திகள் அவமதிப்பு ஆகாது.

சட்ட பிரிவு 4 ன்படி அவமதிப்பு ஆகாது

அதேபோல் நீதிமன்ற நடவடிக்கைகளை நேர்மையான முறையில் எந்தவிதமான தவறுகளும் இல்லாமல், அப்படியே வெளியிடுவது

சட்ட பிரிவு 5, 6 மற்றும் 7 ன்படி அவமதிப்பு ஆகாதவைகள்

சட்டப்பூர்வ நடவடிக்கை பற்றி எந்தவிதமான தவறான எண்ணமும் இல்லாமல் நேர்மையாக விமர்சிப்பது அவமதிப்பு ஆகாது

நீதிமன்ற தலைமை அதிகாரியை பற்றிய புகார் குறித்து நல்லெண்ணத்துடன் வெளியிடப்பட்ட அறிக்கை அவமதிப்பு ஆகாது

குறிப்பிட்ட சில இனங்கள் தவிர, பொதுவாக நீதிபதியின் அறையிலோ அல்லது வெளியாட்கள் அனுமதிக்கப்படாமல் இரகசியமாக நடந்த நீதிமன்ற நடவடிக்கைகள் பற்றிய தகவல்களை வெளியிடுவது அவமதிப்பு ஆகாது

**2006 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அவசர சட்டத் திருத்தத்தின்படி பிரிவு 13 ல் புதிதாக (b) என்ற உட்பிரிவில் உள்ளவைகள்**

நீதிமன்ற அவமதிப்பு சட்டத்தில் 2006 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அவசர சட்டத் திருத்தத்தின்படி, பிரிவு 13 ல் புதிதாக (b) என்ற உட்பிரிவு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி குற்றம் சாட்டப்பட்டவர், அவரால் செய்யப்பட்ட அவமதிப்பு என்பது, உண்மையின் அடிப்படையில் தான் என்ற தற்காப்பு கோர வழி செய்கிறது. குறிப்பிட்ட செய்தி மக்கள் நலனுக்காக தான் வெளியிடப்பட்டது என்பதிலும் குற்றம் சாட்டப்பட்டவரின் தற்காப்பு கோரிக்கை உண்மையானது தான் என்பதிலும் நீதிமன்றம் மனநிறைவு அடைந்தால் அவருடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் பல்வேறு சட்டங்களை தெரிந்து கொள்ள இணையங்களை தொகுத்துள்ளேன் படிக்க

http://gslaf.blogspot.com/

கட்டுரை எழுத்துக்கள் :லினிஸ் ரகுநாத் (LINIS RAGUNATH)

முனைவர். இரகுநாதன், உதவி பேராசிரியர்

Dr. Ragunathan, Assistant Professor

Posted 19th July 2020 by LinisRagunath (லினிஸ் ரகுநாத்)
Labels: STUDY MATERIAL